கண்களுக்கு கண்ணாடி வழங்குபவர்
பல் கட்டுவதில் கை தேர்ந்தவர்
★ ★ ★
பி.ஐ. பர்னாண்டோ
542, ஆஸ்பத்திரி வீதி,
(அரசினர் வைத்தியசாலை முன்)
யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

பல் கட்டுவதில் கை தேர்ந்தவர்
கண்களுக்கு கண்ணாடி வழங்குபவர்
★ ★ ★
★ பி. ஐ. பர்னாண்டோ ★
542, ஆஸ்பத்திரி வீதி,
(அரசினர் வைத்தியசாலை முன்)
யாழ்ப்பாணம்.

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 புரட்டாதி 04 வெள்ளிக்கிழமை (20-09-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 290

# ஜனாதிபதி பிரேமாவுக்கு நெருக்கடி வலுக்கிறது!

## அதிருப்தியாளர் கை ஓங்குகிறது?

கொழும்பு, செப்டெம்பர் 20

இடைநிறுத்தி வைக்கப்பட்ட நாடாளுமன்றம் மீண்டும் கூடுவதற்கு இன்னும் நான்கு நாட்கள் இருக்கையில், ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸாவுக்கு நெருக்கடி வலுத்திருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கட்சிக்குள் அதிருப்தியாளர்களின் கை ஓங்கி வருவதாகவும் அச் செய்திகள் மேலும் தெரிவித்தன.

1990 ஜூனுக்கு முன்னர் விடுதலைப் புலிகளுக்கு ஜனாதிபதி பிரேமதாஸா ஆயுதங்களை வழங்கினார் என்ற விவகாரத்தை அவருக்கு எதிரான அதிருப்தியாளர் குழுவினர் தங்களுக்கு பெரும் பிரசார ஆயுதமாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த விவகாரம் திரு. பிரேமதாஸாவுக்கு எதிராக கட்சி மேல்மட்டம் வரை பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது.

புலிகளுக்கு தான் ஆயுதம் வழங்கியதை ஒப்புக்கொள்வது போன்ற பாணியில், அரச நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் அவர் உரையாற்றியிருப்பதும் அவருக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இரு துணை அமைச்சர்கள் நேற்று இராஜினாமா!

கொழும்பு, செப். 20

ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மேலும் இரு துணை அமைச்சர்கள் நேற்று தமது பதவிகளை இராஜினாமாச் செய்துள்ளனர்.

திரு. ரவீந்திர சமரவீர, திரு. ஆரியரத்ன ஜெயதிலக ஆகியோரே தமது பதவிகளை இராஜினாமாச் செய்தவர்கள் ஆவர்.

பலசாட்சிக்கு விரோதமாக செயற்பட முடியாததாலும் சுயமரியாதையைப் பாதுகாக்க வேண்டியிருப்பதாலும் துணை அமைச்சர் பதவிகளை தாம் ராஜினாமாச் செய்வதாக அவர்கள் இருவரும் தெரிவித்துள்ளனர்.

## இராஜினாமா கடிதத்தை மூன்றாமவர் உடன் வாபஸ்!

நேற்று தமது பதவிகளை இராஜினாமாச் செய்த இரு துணை அமைச்சர்களுடன் சேர்ந்து மற்றொரு துணை அமைச்சரான சரத்சந்திர ராஜகருணவும் தமது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்திருந்தார்.

ஆனால் பின்னர் அதனை அவர் வாபஸ் வாங்கிக் கொண்டார் என்று ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன. [உ-எ]

## பிரேமாவுக்கு எதிரான பிரேரணை மீது விவாதம் நிச்சயம் நடைபெறும்

### ஜனாதிபதிக்கு சபாநாயகர் பதில்

ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டிருக்கும் அரசியல் குற்ற விசாரணைப் பிரேரணை நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

—இவ்வாறு சபாநாயகர் எம். எச். முகம்மது மீண்டும் வலியுறுத்தியிருக்கிறார்.

மேற்படி பிரேரணை நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக் கொள்ளப்படாததால் அது காலாவதியாகிவிட்டது என்று தெரிவித்து ஜனாதிபதி பிரேமதாஸா எழுதிய இரண்டாவது கடிதத்திற்கும் சபாநாயகர் பதில் அனுப்பியிருக்கிறார்.

அந்தப் பதிலிலேயே பிரேரணை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவது உறுதி என்று அவர் தெரிவித்திருக்கிறார். [உ-எ]

## அரச எம்.பிக்கள் கூட்டத்தில் சபாநாயகர் மீது கண்டனம்

கொழும்பு, செப். 20

ஜனாதிபதிக்கு எதிரான குற்ற விசாரணைப் பிரேரணை தொடர்பாக சபாநாயகர் எம். எச். முகம்மது நடந்து கொண்ட விதம் குறித்து, நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற அரசாங்க நாடாளுமன்றக்குழுக் கூட்டத்தில் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

பிரேரணை சபாநாயகரிடம் கையளிக்கப்பட்ட பின், எதிர்க்கட்சித் தலைவர் ஒருவரை தமது இல்லத்திற்கு அழைத்து அந்தப் பிரேரணையில் கையொப்பம் வைக்க சபாநாயகர் அனுமதித்திருக்கிறார் என்றும் அக்கூட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி பிரேரணையை தாம் ஏற்றுக் கொண்டுவிட்டதாக சபாநாயகர் ஆகஸ்ட் 28 ஆம் திகதி அறிவித்தார் என்றும்—

ஆனால் அமைச்சர் அத்துலத்முதலி தாம் அமைச்சர் பதவியை ராஜினாமாச் செய்த பின்னர் ஆகஸ்ட் 30 ஆம் திகதியே பிரேரணையில் கைெயழுத்திட்டதாக அறிவித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கவையாகும்.

## வலி. வடக்கிலிருந்து நேற்று 19 வயோதிபர்கள் மீட்பு!

யாழ்ப்பாணம், செப். 20

வலி. வடக்கில் காங்கேசன்துறை, தையிட்டிப் பகுதிகளில் இராணுவத்தினரின் பிடியில் சிக்கியிருந்த 19 வயோதிபர்கள் நேற்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகளால் அங்கிருந்து மீட்கப்பட்டு யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

காங்கேசன்துறையிலிருந்து கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு அழைத்து வரப்பட்ட இவர்கள், அங்கிருந்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். அலுவலகத்திற்கு கூட்டிவரப்பட்டனர். பின்னர் அங்கு வைத்து உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

மீட்டு வரப்பட்டவர்களில் மூன்று வயோதிபர்கள் கடுமையாக நோய்வாய்ப்பட்ட நிலையில் இருந்ததால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

மீட்கப்பட்டவர்களில் சிலர் சித்தப்பிரமை பிடித்த நிலையில் காணப்பட்டனர்.

வலி. வடக்கில் சிக்கிய பொதுமக்களில் ஒரு பகுதியினரை முன்னரும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினர் மீட்டு வந்தனர் என்பது தெரிந்ததே. (உ-5)

## ஜனாதிபதி மீண்டும் உறுதிமொழி

கொழும்பு, செப். 20

தற்போதைய நாடாளுமன்றத்தின் ஆயுட்காலம் முடியும் வரை, நாடாளுமன்றம் கலைக்கப்படமாட்டாது.

இந்த உறுதிமொழியை ஜனாதிபதி பிரேமதாஸா கடந்த புதன்கிழமை மாலை இடம்பெற்ற அரசாங்க நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் வழங்கினார்.

## சென்னையில் கைது

சென்னை, செப். 20

போலி பாஸ்போர்ட் மற்றும் மலேசிய டொலர்களை வைத்திருந்த இலங்கைத் தமிழர் ஒருவரை சென்னையில் பொலீஸார் கைது செய்தனர் என்று அறிவிக்கப்படுகிறது. [இ-எ]

## அகதிகள் அடுத்த வாரம் மன்னார் வந்து சேருவர்?

யாழ்ப்பாணம், செப். 20

தமிழகத்தில் இருந்து முதல் கட்டமாக ஆறாயிரம் ஈழ அகதிகள் அடுத்த வாரமளவில் மன்னாருக்கு வரவிருக்கின்றனர்.

இந்திய அரச கப்பல் மூலம் அகதிகளை மன்னாருக்கு அழைத்து வந்து, ஐ. நா. அகதிகள் தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மன்னாரில் இந்த அகதிகளைத் தங்கவைக்க சனிவிலேஜ், பேசாலை ஆகிய இடங்களில் முகாம்கள் அமைக்கப்பட்டு விட்டதாகவும், ஐ. நா. அகதிகள் தூதரக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஓ-3)

## 8 ஆயிரம் ஈழ அகதிகள் விரைவில் நாடு திரும்புவர்

### பிரட்மன் நேற்றுத் தகவல்

கொழும்பு, செப். 20

தமிழகத்தில் தஞ்சமடைந்து தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளில் சுமார் 8 ஆயிரம் பேர் இன்னும் சில காலத்தில் இலங்கை திரும்பக்கூடும்.

ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் நேற்று செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

இலங்கை திரும்ப விருப்பம் தெரிவித்துள்ள அகதிகளின் பெரும்பாலானோர் மன்னார் மற்றும் திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள். அவர்களை அவரவர் ஊர்களுக்குக் கொண்டு சேர்ப்பிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன— என்று அவர் மேலும் சொன்னார். [ஓ-எ]

## முச்சந்தி முரளி



அப்பா... செவ்வாய்க்கிழமையோடை அதிருப்தியாளர் திருப்தியடைஞ்சிருவினம் போலை......!

## மெதிரிகிரியவில் 11 முஸ்லிம்கள் உயிரிழப்பு

கொழும்பு, செப். 20

கிழக்கு மாகாணம் பொலனறுவை மாவட்டத்தில் மெதிரிகிரிய எல்லைக் கிராமத்தில் நேற்றுக் காலை இனந்தெரியாத குழு ஒன்று நடத்திய தாக்குதலில் இரு பெண்கள் உட்பட 11 முஸ்லிம்கள் உயிரிழந்தனர்.

உயிரிழந்தோரில் பெரும்பாலானோர் விவசாயிகள் என்று தெரிவிக்கப்படுகிறது.

## மேலும் 15 வேங்கைகள் மணலாறில் களப் பலி!

யாழ்ப்பாணம், செப். 20

மணலாறு மாவட்டத்தில் தொடர்ந்து நடந்து வரும் போரில் கடந்த திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் மேலும் 15 வேங்கைகள் களப் பலியானார்கள்.

திங்களன்று வீரமரணமடைந்த போராளிகள் விவரம் வருமாறு:-

திரான் — [விஸ்வலிங்கம் சிவலிங்கம் - நெடுங்கேணி], சுந்தர் — [நல்லையா கோகிலதாஸ் - முல்லைத்தீவு], ரவிராஜ் — [மல்லாகன் சந்திரமோகன் - நெடுங்கேணி], கலாஞ்சலி — [சந்திராதேவி சோமசுந்தரம் - புளியங்குளம்], நவராஜ் — [பிறேம தாஸ் பிறேமரட்ணம் - வவுனியா].

ஜனனி — கமலாதேவி கந்தையா - முருங்கன்], றொ

[4 ஆம் பக்கம் பார்க்க]

## மணலாறு சண்டையில் 3 ஆயிரம் புலிகள்!

### இராணுவ வட்டாரங்கள் தகவல்

கொழும்பு, செப். 20

மணலாறு, முல்லைத்தீவுப் பகுதிகளில் நடந்து வரும் சண்டையில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விடுதலைப்புலிகள் போராளிகள் ஈடுபட்டுள்ளனர் என்று ஸ்ரீலங்கா இராணுவ வட்டாரங்கள் தெரிவித்ததாக பி. பி. ஸி. நேற்றிரவு தெரிவித்தது.

இதேவேளை —

கொழும்பில் நேற்று நடந்த வாராந்திர செய்தியாளர் மாநாட்டில் இராணுவப் பேச்சாளரான கேர்ணல் சரத் முனசிங்க சொன்னதாவது:-

முல்லைத்தீவு காட்டுப் பகுதிகளில் நடைபெற்றுவரும் சண்டையில் மேலும் 2 ஆயிரம் பேர் வரையான விடுதலைப் புலிகள் புதிதாகச் சேர்ந்து கொண்டுள்ளனர். அங்கு கடும் சண்டை தொடர்ந்து நடந்து வருகிறது.

விடுதலைப் புலிகள் தமது

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சண்டை தொடர்கிறது: 58 படையினர் மரணம்

மணலாறு, முல்லைத்தீவுப் பகுதிகளில் நடந்து வரும் போரில் இதுவரை அதிகாரிகள் சிலர் உட்பட 58 படையினர் கொல்லப்பட்டுள்ளனர் என்று கொழும்பில் இராணுவ அதிகாரிகள் நேற்றுத் தெரிவித்தனர்.

இதற்கிடையில்—

மணலாறுப் பகுதியில் நேற்றும் கடும் சண்டை தொடர்ந்ததாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

நேற்றைய சண்டையில் படையினருக்கு பெரும் இழப்புக்கள் ஏற்பட்டன என்றும், படையினரின் முன்னேற்றத்தில் தடங்கல் ஏற்பட்டுள்ளது என்றும் தெரியவந்தது.

விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் தீவிரமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-3-15)

## புலிகளுடன் சேர்ந்து அரச படைகள் தமிழ் தேசிய ராணுவத்துடன் மோதின!

### பிரேமா வெளியிட்ட தகவல்

கொழும்பு, செப். 20

''கிழக்கு மாகாணத்தில் மக்களைப் பாதுகாப்பதற்காக ஸ்ரீலங்கா அரச படையினரும் விடுதலைப் புலிகளும் இணைந்து தமிழ்த் தேசிய இராணுவத்திற்கு எதிராகச் சண்டையிட்டனர்.''

— இவ்வாறு கூறினார் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா.

நேற்று முன்தினம் மாலை அரசாங்க நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இப்படிச் சொன்னார்.

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் மற்றும் தளபாடங்களை வழங்கினார் என்று அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக் குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் இப்படிச் சொன்னார்.

ஆனால் விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டதா அல்லது இல்லையா என்பது குறித்து அவர் திட்டவட்டமாக ஏதும் கூறவில்லை.

அவர் மேலும் கூறியதாவது:-

அரசியல் குற்றப் பிரேரணை நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் ஏன் இன்னும் இடம்பெறவில்லை? ஜனாதிபதி மீது நம்பிக்கை தெரிவித்து 116 எம்.பிக்களின் கையொப்பங்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட மகஜர் குறித்துச் சபாநாயகர் ஏன் இன்னும் பதிலளிக்கவில்லை?

நிதி சம்பந்தமான சட்ட மூலம் ஒன்றில் அரசாங்கம் தோல்வியடைந்து விடும் என்று எதிர்பார்த்து அரசியல் குற்றப்பிரேரணையை விவாதத்திற்கு விடாது வைத்திருப்பதற்கு அவர்கள் விரும்புகிறார்கள் போல் தெரிகிறது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### உடன் தேவை

தையல் நிறுவனம் ஒன்றிற்கு Partner ஆகவும், ஆண்களுக்குரிய ஆடைகள் வெட்டித் தைக்கக் கூடியவராகவும் உள்ளவர் தேவை. சலுகைகள் வழங்கப்படும். கடித மூலம் தொடர்பு கொள்ளவும். இல. 349. மே/பா உதயன், யாழ்ப்பாணம். [18184]

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலையில் மோதிரமொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும். தொடர்பு: செயலாளர், கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை, மானிப்பாய். [சி-0548]

### ரைப்ரைட்டர்

Typewriters தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும், தமிழ் - ஆங்கில தட்டச்சு வேலைகளுக்கும், பியூடோ, 39/17, மின்சார நிலையவீதி, 3 ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (சி/0533)

### தவறிவிட்டது

காசிடபிள்ளை சிவானந்தராசா ஆகிய எனது அடையாள அட்டை இல. 603554760V, வாகன சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் ஆவணங்கள் அடங்கிய பிளாஸ்ரிக் Card Holder 15 - 9 - 91 இரவு யூநகரிக்கும், பரந்தனுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் பணிமனையில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [18192]

14 - 9 - 91 இரவு முறிகண்டிக்கும், மாங்குளத்திற்கும் இடையில் முக்கிய பிரயாண ஆவணங்களும், அடையாள அட்டையும் [636980722V] எனது கைப்பையுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உதயன் பணிமனையில் அல்லது பிதா ஸ்ரேரால் திருநெல்வேலிச் சந்தி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [18194]

### சோதிடம்

உங்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட சிக்கல்கள், கஷ்டங்கள், கடன், தோஷங்கள் எல்லாம் சூரியனைக் கண்ட பனி போல் நீங்கும். நேரில் வரவும். ஸ்ரீ சக்தி கணேஷ உபாசகர், ஸ்ரீ மாலை விநாயகர் சோதிட நிலையம், 146, பருத்தித்துறை றோட், [ஸ்ரீ வீரமாகாளி கோவிலடி] நல்லூர். [18195]

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், பீனிசம், தலையிடி, தலைகாலவியல், சூதகக்குத்து, சரும நோய்கள் மற்றும் சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேணை வைத்தியர், சி இராசரத்தினம், 121, 2 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். [4265]

## அனுமதி பெற்று கொண்டு வந்த பற்றறி பறிமுதல்

அனுமதி பெற்று எடுத்து வந்த பற்றறிகளும் வவுனியா தடை முகாமில் படையினரால் பறிமுதல் செய்யப்படுகின்றன.

யாழ். செயலக அதிகாரி ஒருவருக்கே இந்த அனுபவம் ஏற்பட்டது. [இ-100]


# டிப்ளோமா மனைப் பொருளியல்
## DIPLOMA IN HOME ECONOMICS

★ கேக் ஐசிங்:

★ சமையற் கலை:
[கீழைத்தேய, மேலைத்தேய உணவு வகைகள், சிற்றுண்டிகள், குளிர்பானங்கள், ஐஸ்கிறீம் வகைகள், புடிங் வகைகள் மற்றும் உள்ளூரில் கிடைக்கும் மூலப்பொருள்களைக் கொண்டு உணவுகள் தயாரித்தல்.]

★ தையற் கலை:
[குழந்தைகள், சிறுவர்கள், மகளிருக்கான உடைகள் தயாரித்தல், பூவேலைப்பாடுகள் செய்தல்].

★ கூந்தல் அலங்காரம்:
[கொண்டைகள் போடுதல், விக் தயாரித்தல், மணப்பெண் அலங்காரம் செய்தல்].

★ கைவேலை:
[மக்றமி, நூல் வேலைப்பாடுகள், கம்பளி நூல் வேலைப்பாடுகள், பஞ்சில் பொம்மைகள் செய்தல், வாழைநார வேலைப்பாடுகள்].

★ பூவேலை:
[கடதாசியினாலும், துணிகளினாலும் மலர்களை உருவாக்குதல்].

★ வர்ணம் தீட்டுதல்:
[துணிகளிலும், கண்ணாடிகளிலும், இசைத்தட்டுக்களிலும்].

★ சித்திரக் கலை:
[சித்திரங்கள் வரைதல், கோலங்கள் போடுதல்]

★ பயிற்சிக் காலம் 6 மாதங்கள்

- பயிற்சி முடிவில், DIPLOMA IN HOME ECONOMICS தராதரச் சான்றிதழ் வழங்கப்படும்.
- கிழமை நாள் வகுப்புகள், திங்கள், புதன் ஆகிய இரு தினங்களில் காலை 9-00 மணி முதல் பி. ப. 1-00 மணி வரை நடைபெறும்.
- தொழில் புரிவோர், பாடசாலை மாணவிகள் வசதி கருதி சனி, ஞாயிறு வகுப்புகளும் நடைபெறும்.

புதிய கிழமை நாள் வகுப்புகள்
ஆரம்பம்: 25 - 09 - 1991
சனி, ஞாயிறு வகுப்புகள்
ஆரம்பம்: 28 - 09 - 1991

விபரங்களுக்கு:

# கலாலயா

விக்டோரியா வீதி.
(ஆஸ்பத்திரியின் பின்புறம்)
யாழ். நகர்.
(சி-0529)

யாழ். பல்கலைக்கழகத்திற்கான
# பட்டப்படிப்புகள்
(முற்றிலும் பல்கலைக்கழக வசதிகள் கொண்ட ஒரே நிறுவனம்)

**G. A. Q.** (8-00 — 5-00)
**1st In COM.** (8-00 — 5-00)

விரிவுரைகள் ஆரம்பமாகி விட்டன!
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன!

பேராதனை விரிவுரைகள் 05 - 10 - 1991
8 - 00 மணி

பகல் நேர விரிவுரைகள் (G.A.Q. — 1st IN COM) ஆரம்பமாகவுள்ளன.

பெயர்கள் முன் கூட்டியே பதிவு செய்யப்பட வேண்டும்.

மு. குறிப்பு (விக்னா கல்வி நிறுவன விரிவுரையாளராலும், பட்டப்படிப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த விரிவுரையாளர்களாலும் ஒருங்கிணைந்து போதிக்கப்படும்.)

*The College of Higher Studies,*
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
[ஆனைப்பந்தி தனியார் வைத்தியசாலைக்கு அருகாமை] [சி-0549]


# அமெரிக்க இலங்கை மிஷனின் 175 ஆவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டங்கள்

எம் மக்கள் மத்தியில் சேவை புரிந்து வரும் அமெரிக்க இலங்கை மிஷனின் (தற்போலதய யாழ். தென்னிந்திய திருச்சபையின்) 175 ஆண்டுகள் நிறைவைக் குறிக்கும் வகையில் பின்வரும் நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

1. **செப்டம்பர் 20ஆம் திகதி வெள்ளி கொடி தினம்**
இது முன்னைய மற்றும் தற்போதைய அமெரிக்கன் மிஷன் பாடசாலைகள், ஸ்தாபனங்கள் ஆகியவற்றில் நடைபெறும்.

2. **செப்டம்பர் 21ஆம் திகதி சனி**
காலை 8.30 மணி — சிறப்பு வழிபாடு உடுவில் தென்னிந்திய திருச்சபையில்
காலை 10.30 மணி — சிறப்புக் கலை நிகழ்ச்சிகள் உடுவில் மகளிர் கல்லூரியில்
மாலை 2.30 மணி — தெல்லிப்பழையிலுள்ள மிஷனரிமாரின் கல்லறையில் மலர் வளையம் வைத்தல்
மாலை 4.00 மணி — இலங்கை கிறிஸ்தவ இறையியல் கல்லூரியின் புதிய விடுதிக் கட்டட திறப்பு வைபவமும் பொதுக் கூட்டமும் கிறிஸ்தவ இறையியற் கல்லூரி மருதனார்மடம், சுன்னாகம்

3. **செப்டம்பர் 22 ஆம் திகதி ஞாயிறு**
சிறப்பு வழிபாடும் சிறப்பு நிகழ்ச்சிகளும் இது சகல யாழ். தென்னிந்திய திருச்சபைகளிலும் இடம் பெறும்.

4. **செப்டம்பர் 23ஆம் திகதி திங்கள்**
யாழ். தென்னிந்திய திருச்சபை ஆசன ஆலயம் வட்டுக்கோட்டையில்
காலை 8.30 மணி — நன்றி செலுத்தும் திருவிருந்து ஆராதனை
காலை 11.00 மணி — மிஷன் கூட்டமும் கலை நிகழ்ச்சிகளும்
மாலை 2.30 மணி — பொதுக் கூட்டம் (இதில் உள்ளூர், வெளி நாட்டும் பிரமுகர்கள் கலந்து கொள்வார்கள்)

அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் அனைவரும் அழைக்கப்படுகின்றீர்கள்.

அருள் திரு. அ. ஜெயக்குமாரன்.
செயலாளர்
யாழ். தென்னிந்திய திருச்சபை.
(சி-0550)


# கலை, வர்த்தகக் கல்லூரி

**C.C.A.** A/L 92
பிரிவு III

| | | |
|---|---|---|
| வர்த்தகம் | — | 7- 8 |
| கணக்கியல் | — | 8- 9 |
| பொருளியல் | — | 9-10 |
| இந்துநாகரீகம் | — | 10-11 |
| அளவையியல் | — | 12- 1 |

ஆரம்பம்: 21 - 09 - 1991
மு. ப. 8.00 மணி
குறிப்பு: முழுப்பாடத் திட்டமும் முடிக்கப்படும்.
[சி-0542]

யாழ். பல்கலைக்கழகப் பட்டப்படிப்புகள்
# கலை, வர்த்தகக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்திக்கு அருகாமை)

First In Com.
G. A. Q.

ஆரம்பம்: 21 - 09 - 1991
சனி 8-00 மணி
கணக்கியல் — ஸ்ரீ
குறிப்பு: சகல பாடங்களின் விரிவுரைகளும் ஆரம்பமாகின்றன.
(சி-0545)

அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க
## அரசாங்க எழுதுனர் சேவை
## கிராம அலுவலர் (G.S.) சேவை
போட்டிப் பரீட்சைக்கான
## 2ஆவது துரித பயிற்சி வகுப்புகள்
ஆரம்பம்: 21 - 09 - 1991 பி.ப. 2-00 மணி

பாடநெறி:
மொழித்தேர்ச்சி, பொதுஉளச்சார்பு, பொது அறிவு
விண்ணப்பப் படிவங்களை நேரில் பெறலாம்.
விண்ணப்ப முடிவுத் திகதி: 30 - 09 - 1991

★ அச்சடித்த பாடக் குறிப்புகள்
★ கட்டணம் ரூபா 290/- முழுப்பயிற்சிக்கும்
★ விரிவுரைகள் சனியும், ஞாயிறும்.

**ASTAN INSTITUTE**
101/10, STANLEY ROAD, JAFFNA.
(மக்கள் வங்கிக்கு அருகாமையில்) (சி-0523)


## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

உதயம்: 27 — 05 — 1956



உதிர்வு: 20 — 09 — 1989

அமரர்
## செல்லத்துரை தனபாலசிங்கம்

ஆண்டிரண்டு சென்றாலும் தங்கள் நினைவலைகள் எம் இதயங்களை விட்டகலாது;

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை பிரார்த்திக்கும்,

தாய், சகோதரர், சகோதரிகள்,
மைத்துனர், மைத்துனிமார்,
பெறாமக்கள், மருமக்கள்.

அம்மன் வீதி.
திருநெல்வேலி, வடக்கு. [18200]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### மணலாறை பாதுகாப்போம்

மணலாற்றில் யுத்தம் தொடங்கி இருபது நாட்கள் கழிந்துவிட்டன.

ஆனையிறவுப் போரைப் போலவே அரசாங்கப் படைகள் மூன்றும், தமது முழுப் பலத்தையும், சக்தியையும் திரட்டி கடந்த மூன்று வாரங்களாகப் போராடி வருகின்றன.

புதிதாகக் கொள்வனவு செய்த ஜெட் குண்டு வீச்சு விமானங்கள் உட்பட நவீன ஆயுதங்கள் பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றன. ஆனையிறவு முற்றுகையை முறியடிக்க ஈடுபட்டவர்களை விடப் பலமடங்கு கூடுதலான படை அணியினர் - ஆளணியினர் - இந்தப் போரில் ஈடுபட்டுள்ளார்கள்.

வெளிநாடுகளில் சிறப்புப் பயிற்சி பெற்ற பிரிகேடியர் ஜானக பெரேராவின் வழிநடத்தலில் விசேட படையணியினர் தீவிரப் போர் புரிவதாக அறிவிக்கப்படுகிறது. இந்த விசேட படையினர் காடுகளில் யுத்தம் புரிவதற்கென்று சிறப்பாகப் பயிற்றுவிக்கப்பட்டவர்கள்.

ஸ்ரீலங்காப் படைகள் இத்தனை படைபல வசதிகளுடன் போராடிய போதிலும் விடுதலைப் புலிகளின் கடும் எதிர்த் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் திண்டாடுகின்றனர்!

அங்குலம் அங்குலமாகவே முன்னேற முடிகிறது. காடுகளில் போர் புரிவதில் புலிகள் பழக்கப்பட்டவர்கள். அவர்களுடன் போராடுவது கடினம். அதனால் எமது வீரர்களுக்கு மிகவும் கஷ்டமாக உள்ளது — என்று இராணுவ உயர் அதிகாரிகள் கூறுமளவுக்கு பெரும் உக்கிரப் போர் நடந்து வருகிறது.

இந்தளவு முக்கியத்துவத்துடன், மிகப்பெரும் எடுப்பில், அரசபடைகள் மணலாறைக் கைப்பற்ற நடத்தும் போர், வெறும் இராணுவ வெற்றியை மட்டும் இலக்காகக் கொண்டதல்ல. தமிழர் தாயகத்தை இரண்டாகப் பிளந்துவிடும் அரசியல் சூழ்ச்சி நிறைந்தது.

தமிழர் தாயகத்தின் வடக்கையும், தெற்கையும் தொடுக்கும் கேந்திரப் பிரதேசமாக விளங்குவது மணலாறு. அங்கு சிங்களவர்களைக் குடியேற்றி தமிழர் நிலத்தொடரைத் துண்டித்து விட்டால் தனிநாடு கோருவதை தடுத்து விடலாம். தமிழர் தாயகத்தைத் துண்டாடி விடலாம் — என்ற பெரும் திட்டத்துடனேயே மணலாற்றில் கடந்த பல வருடங்களாக அரசு நெருப்புக்கள் வைத்துள்ளது.

எனவே ஆனையிறவுப் போரைவிட, மணலாறுப் போர் தமிழர்களுக்கு மிகவும் முக்கியமானது. மணலாறைக் காப்பாற்ற வேண்டியது பெரும் சரித்திரப் பொறுப்பு. தமிழர் தாயகக் கோட்பாட்டை நிலைநிறுத்த மிகப் பிரதானமானது.

இந்த முக்கியத்துவத்தை உணர்ந்து மணலாறுக் களத்தில் நிற்கும் போராளிகளுக்குச் சகல உதவிகளையும் செய்ய வேண்டியது மக்கள் கடமையாகும். ஆனையிறவுப் போரின் போது ஏற்பட்ட எழுச்சியும், வேகமும் மேலும் பெருகிப் போராளிகளுக்கு மனப்பலத்தையும், தென்பையும், உற்சாகத்தையும் கொடுக்க வேண்டும். மக்கள் தங்களுக்குப் பின்னால், பக்கபலமாக நிற்கிறார்கள் என்பது தெரிந்தால் போராளி பத்து மடங்கு எழுச்சியுடனும், வீரத்துடனும், திடசிந்தையுடனும் போராடி வெற்றி ஈட்டுவான்.

## திலீபன் நினைவுக் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், செப். 20

தியாகி திலீபனின் நான்காம் ஆண்டு நினைவை முன்விட்டு இன்று 20 ஆம் திகதி பின்வரும் இடங்களில் கூட்டங்கள் நடைபெறுகின்றன.

★ வலிகாமம் பகுதிக்கான கூட்டம் — பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் இரவு 7 மணிக்கு.

★ தீவகத்துக்கான கூட்டம் — புங்குடுதீவு, இருப்பிட்டி, பெரியபுலம் பிள்ளையார் கோவில் முன்றலில் பிற்பகல் 6.30 மணிக்கு.

★ வடமராட்சிக்கான கூட்டங்கள் — சக்கவேலி மகா வித்தியாலயத்தில் முற்பகல் 10 மணிக்கும், இன்பருட்டி தேவாலய முன்றலில் பிற்பகல் 4 மணிக்கும்.

★ தென்மராட்சிக்கான கூட்டம் — கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயத்தில் இரவு எட்டு மணிக்கு.

(ஜ-3)

### வீதியில் கண்டெடுத்த

## ரூ.90 ஆயிரத்தை உரியவரிடம் ஒப்படைத்த தமிழ் இளைஞர்!

கொழும்பு, செப். 20

கொழும்பு காலி வீதியில் 90 ஆயிரம் ரூபா பணத்தைக் கண்டெடுத்த தமிழ் இளைஞர் ஒருவர் அதனை உரியவரிடம் திருப்பிக் கொடுத்தார்.

இந்தச் சம்பவம் கடந்த 10 ஆம் திகதி இடம் பெற்றது.

கொஸ்தா என்ற சிங்களவரே பணத்தைத் தவறவிட்டவர் ஆவார்.

வங்கியில் இருந்து கடனாகப் பெற்ற 90 ஆயிரம் ரூபா பணத்தை மோட்டார் சைக்கிளில் மனைவியுடன் காலி வீதியால் வரும்போது இவர் தவறவிட்டார்.

பெரும் வேதனையுடன் இவர்கள் கடந்து வந்தபாதையால் பணத்தைத் தேடத் தொடங்கினர்.

பணத்தைக் கண்டெடுத்த தமிழ் இளைஞர், அவர்கள் வீதியில் எதையோ தேடி அலைவதைக் கண்டு அவர்களை விசாரித்துப் பணத்தை திருப்பிக் கொடுத்தார்.

அதற்குப் பிரதியுபகாரமாக அவர் சன்மானம் எதையும் வாங்கமறுத்து விட்டாராம்.

### குருக்களுக்கு பாராட்டு விழா

யாழ்ப்பாணம், செப். 20

வட்டுக்கோட்டை துணவி அரசடி விநாயகர் ஆலயத்தில் தொடர்ச்சியாக அறுபது ஆண்டுகள் பணியாற்றிய பிரம்மஸ்ரீ செ. மகேஸ்வரக் குருக்களுக்கு இன்று பாராட்டு விழா நடைபெறுகிறது.

மேற்படி ஆலயத்தில் பிற்பகல் 2 மணிக்கு பாராட்டு விழா நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். திரு. சி. சபாநாதன் விழாவுக்குத் தலைமை வகிப்பார்.

குருக்களுக்கு பொன்னாடை போர்த்தலும், பொற்கிழி வழங்கலும், பாராட்டுரைகளும் விழாவின் முக்கிய நிகழ்ச்சிகளாக அமையும். [அ-3]

### கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப். 20

தென்மராட்சியில் உள்ள சகல தனியார் கல்வி நிறுவன இயக்குநர்கள், ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல், இன்று மாலை 4 மணியளவில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற உள்ளது. (ஓ)

★ ★ ★

யாழ்ப்பாணம், செப். 20

தமிழீழ ஆய்வு நிறுவனம் ஏற்பாடு செய்துள்ள கரிசுத உற்பத்தி சம்பந்தமான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு ஆய்வு நிறுவன மையப் பணியகத்தில் நடைபெறும்.

இந்தத் துறையில் செயற்படுபவர்களும், ஆர்வம், அனுபவம் உள்ளவர்களும் இதில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். (த)

### கருத்தரங்கும் செயலமர்வும்

யாழ்ப்பாணம், செப். 20

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் அமைந்துள்ள, யாழ். கல்விக் கோட்ட முறைசாராக் கல்வி உபவள நிலையம் ஒழுங்கு செய்துள்ள சமூக மேம்பாட்டுக்கான கருத்தரங்கும், செயலமர்வும் எதிர்வரும் 22 ஆம், 23 ஆம் திகதிகளில் நடைபெறும். (த)

### ஷெல் வீச்சில் இருவர் காயம்

யாழ்ப்பாணம், செப். 20

காரைநகர் முகாமில் இருந்து இரவு 7 மணி தொடக்கம் பொன்னாலை, மூளாய்ப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது; மூளாயில் விழுந்த ஷெல்லுக்கு இலக்காகி இருவர் காயமடைந்தனர். வீடு ஒன்றும் சேதமடைந்தது.

மூளாய் நவாலி வீதியைச் சேர்ந்த தம்பிராசா தியாகராசா (வயது 33), செல்வராசா ரேணுகா (வயது 23) ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர்.

அவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். [ஓ-15]

### பாதுகாப்பு தீவிரம்

சென்னை, செப். 20

சென்னை மீனம்பாக்கம் சர்வதேச விமானநிலையத்தில் உள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பிரிவுகளில் பார்வையாளர்கள் பிரவேசிக்க கடந்த புதன்கிழமை முதல் தடை விதிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

பாதுகாப்புக் காரணமாக விதிக்கப்பட்டுள்ள இத்தடை உத்தரவு மறு அறிவித்தல் வரை நீடிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-எ]

### தியாகத் தேன்: 6

மண்ணின் விடிவுக்காக<br>
திண்ணிய மனதினிலே<br>
எண்ணரிய இலட்சியத்துடன்<br>
தண்ணீரும் அருந்தாமல்<br>
தாகமுடன் நீயிருந்து<br>
தவிப்பதைப்<br>
பார்த்திருந்தோம்!

— வாஞ்சிநாதன்

(தியாகி திலீபன் நினைவாக)

# எதிரி அமைக்கும் முகாம்கள் அவர்களுக்கே புதைகுழிகள்!

### சுன்னாகத்தில் யோகி உரை

யாழ்ப்பாணம், செப். 20

எதிரி எமது மண்ணில் எவ்வளவு பரப்புகளை பிடித்து முகாம்களை அமைக்கின்றானோ அவ்வளவுக்கு இழப்புகளை அவன் சந்திப்பான். இதை வெற்றி என நினைத்து அவர்கள் வரலாம். ஆனால் அது அவர்களுக்கான புதைகுழியே.

மணலாறு சண்டையில் வீரமரணமடைந்த போராளிகளின் புகழுடல்கள் நேற்று முன்தினம் சுன்னாகம் சந்தைக் கட்டடத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட போது, அங்கு அஞ்சலி உரை நிகழ்த்திய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் நாயகம் திரு. யோகரத்தினம் யோகி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், இந்திய இராணுவத்தினர் மணலாறு மாவட்டத்தில் வைத்தே கரந்தடிப் போரை எம்மிடம் கற்றுக் கொண்டனர். இப்பொழுது ஸ்ரீலங்கா ராணுவம் கற்கிறது என்றார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் திரு. கரிகாலன் உரையாற்றுகையில், எமது தாயகத்தை தென் தமிழீழம், வடதமிழீழம் எனத் துண்டாட நினைத்த மணலாற்றில் குவிக்கப்பட்ட சிங்களப் படையினரின் தளங்களைப் பந்தாடிய எமது வீரர், இன்று எமது மண்ணுக்கு உரமாகியுள்ளனர் என்றார்.

திருமலை மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. ரூபன் பேசுகையில், எமது தாயகத்தை துண்டாட முனையும் ஸ்ரீலங்கா அரசின் சதித் திட்டத்தை முறியடிக்கவும், எமது தாயகத்தை மீட்கவும் நாம் இறுதி வரை ஒரே குடையின்கீழ் நின்று போராடுவோம் என்றார்.

வீரமரணமடைந்த போராளிகளுக்கு பெரும் எண்ணிக்கையான மக்கள் திரண்டு வந்து தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். [த]

## கப்பலில் தனியார் தருவிக்கும் பொருள்களை பங்கிட்டு வழங்குக!

### அரச அதிபரிடம் ஒன்றியம் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப் 20

தனியார் துறையினர், மற்றும் தனியார் குழுக்கள் கப்பலில் பொருள்களை எடுத்து வருவதால், மக்களுக்குப் பங்கீட்டுக்கு வழங்குவதற்கான பொருள்களைக் கொண்டு வருவதற்கு இடவசதி போதாதுள்ளது.

ஆகையால், கப்பல் மூலம் தனியார் துறையினர் கொண்டு வரும் பொருள்களை பொது விநியோக முறைக்கு உட்படுத்த வேண்டும்.

இவ்வாறு யாழ் மாவட்ட தமிழர் நலன்காக்கும் ஒன்றியம் அரசாங்க அதிபரிடம் கேட்டுள்ளது.

கப்பலில் உணவுப் பொருள் கொண்டு வருதல், பொருள்களை மாவட்டத்தில் விநியோகித்தல் சம்பந்தப்பட்ட குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி பிரஸ்தாப ஒன்றியம் அரச அதிபருக்கு மகஜர் ஒன்றை அனுப்பி உள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

தற்போது தனியார் வியாபாரிகள், தனிநபர்கள், குழுக்கள் கப்பலில் பெருமளவு இடத்தைப் பிடிப்பதால் பொதுப்பங்கீட்டுக்கு உரிய பொருள்களை எடுத்துவருவது திட்டமிட்டு தடைசெய்யப்படுகிறது.

தனியார் முகவர்கள் அத்தியாவசியப் பாவனைப் பொருள்களை கப்பல் மூலம் எடுத்து வந்தால்கூட உரிய விலையை கொடுத்து ப.நோ.கூ. சங்கங்கள் மூலம் இப்பொருள்களைப் பொறுப்பேற்று விற்பனை செய்யும் பொறுப்பும் அதிகாரமும் அரசாங்க அதிபர் என்ற வகையில் தங்களுக்கு உள்ளதாகவே கருதுகிறோம்.

அரசசார்பற்ற நிறுவனங்கள் உட்பட ஏனைய அமைப்புக்கள் கப்பலில் பொருள்களை எடுத்து வருவதாயின் அவற்றை பொது விநியோக முறைக்கு உட்படுத்த வேண்டும் என்பதை சம்பந்தப்பட்ட சகல ஸ்தாபனங்களுக்கும் தெளிவுபடுத்துவதன் மூலம் மேற்படி ஸ்தாபனங்கள் தமது பொருள்களை எடுத்துவர மாற்று ஒழுங்குகளைச் செய்துகொள்வார்கள். பொது விநியோகத்துக்குரிய பொருள்களை மட்டும் கப்பலில் எடுத்து வருவார்கள்.

1991 புரட்டாதி மாதம் நான்கு வாரங்கள் நிவாரணம் இடம் பெயர்ந்தோருக்கு வழங்கவேண்டிய நிலையில் இன்றுவரை ஒருவார நிவாரணம் தானும் வழங்கி முடிக்கப்படவில்லை. இதில் குறைபாடு யார் பக்கம் என்பது எமக்கு முக்கியம் அல்ல. மக்களுக்கு உரிய நேரத்தில் உதவி கிடைக்க வழிகாட்ட வேண்டியது தங்களுடைய கடமையென்றே கருதுகிறோம்— என்று கூறப்பட்டுள்ளது. [அ]

### கடும் குண்டு வீச்சை அடுத்து

## கிராமப் புறங்களை நோக்கி யானைகள் படையெடுப்பு!

மணலாறு, முல்லைத்தீவுப் பகுதி காடுகளில் இருந்து கூட்டம் கூட்டமாக யானைகள் இடம்பெயர்ந்து வருகின்றன.

கடந்த 20 நாட்களுக்கு மேலாக காட்டுப் பகுதிகளில் ஸ்ரீலங்கா விமானப் படையினரின் சகல விமானங்களும் பல நூற்றுக்கணக்கான குண்டுகளை கண்டபடி — நினைத்த நினைத்த இடங்களில் அள்ளி வீசி வருகின்றன.

இதனால் காட்டுப் பகுதிகளில் விடாது இடிமுழக்கங்கள் முழங்குகின்றன; காடுகள் எரிகின்றன; எங்கும் ஒரே புகை மண்டலமாகக் காட்சியளிக்கின்றது.

இதன் காரணமாகவே அப்பகுதிகளில் இருந்து வனவிலங்குகள் வெளியேறுகின்றன; யானை, புலி, கரடி, பன்றிகள் மற்றும் மிருகங்கள் அனைத்தும், புதுக்குடியிருப்பு, விஸ்வமடு, மாங்குளம், ஒட்டுசுட்டான், வள்ளிபுனம் போன்ற பகுதிகளை நோக்கி இடம்பெயரத் தொடங்கியுள்ளன.

யானைகள் கூட்டம் கூட்டமாக கிராமப் புறங்களுக்கு படையெடுத்து வருகின்றன. அவை வீடுகள், குடிசைகள் மற்றும் பயிர்களை அழித்து வருகின்றன. [ஓ-126]

### நால்வர் பலி

மாத்தறை, பட்டிப்பொலவில் உள்ள வீடு ஒன்றில் குண்டு ஒன்று வெடித்ததில் இரு சிறுவர்கள் உட்பட நால்வர் மரணமடைந்தனர். ஆறு பேர் படுகாயங்களுடன் மாத்தறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

கடந்த திங்கட்கிழமை இச்சம்பவம் நடைபெற்றது.

வீதியில் கிடந்த உருண்டையான பொருள் ஒன்றைக் கண்டெடுத்த மீனவர் ஒருவர் அதனைத் தனது பையில் போட்டுக் கொண்டு வீட்டிற்குச் சென்றார் என்றும் வீட்டில் அப்பொருளை வாயில் வைத்து இழுத்த போது அது வெடித்தது என்றும் கூறப்படுகிறது.

## பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி அக்கினோ மீதும் அரசியல் குற்ற விசாரணைப் பிரேரணை!

மணிலா, செப் 20

பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி கொராஸோன் அக்கினோ மீது அரசியல் குற்றச்சாட்டு சுமத்தும் பிரேரணையைக் கொண்டு வருமாறு முன்னாள் பாதுகாப்பு அமைச்சரும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. என்ரிலே, பிலிப்பீன்ஸ் நாடாளுமன்றத்துக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

பிலிப்பீன்ஸில் அமெரிக்கத் தளத்தை தொடர்ந்து இருக்க வழி செய்யும் புதிய உடன்படிக்கையை செனெற் சபை நிராகரித்துள்ளது தெரிந்ததே.

அமெரிக்கத் தளம் தொடர்ந்திருக்க வேண்டும் என்று ஜனாதிபதி விரும்புகிறார்.

செனெற் சபையின் முடிவை மாற்ற சர்வசன வாக்கெடுப்பு நடத்தப் போவதாக ஜனாதிபதி அக்கினோ அறிவித்திருப்பது அரசியல் சாசனத்திற்கு விரோதமானது என்று செனெற் சபைத் தலைவர் கண்டித்திருக்கிறார்.

அரசியல் சாசனத்திற்கு முரணாக நடப்பதற்காகவே ஜனாதிபதி மீது அரசியல் குற்றப்பிரேரணை கொண்டு வரவேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

அமெரிக்கத் தளம் தொடர்ந்து பிலிப்பீன்ஸில் இருக்கவேண்டும் என்று வற்புறுத்துவது நாட்டில் இரத்தக் களரியை ஏற்படுத்தும் என்று செனெற் சபைத் தலைவர் எச்சரித்திருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபாநாயகரின் மகனை காணாது ஏற்பட்ட பரபரப்பு

கொழும்பு, செப். 20

கடந்த ஞாயிறு இரவு சபாநாயகர் எம். எச். முஹம்மதுவின் புதல்வரான ஹனிபா முஹம்மது வீடு திரும்பவில்லை என்ற வதந்தியைத் தொடர்ந்து கொழும்பு அரசியல் வட்டாரங்கள் பரபரப்படைந்தன.

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த சபாநாயகரான தமது தந்தையை பார்த்து விட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த போதே ஹனிபா முஹம்மது காணாமல் போய் விட்டார் என்று வதந்தி வெளியானது.

உடனே சபாநாயகர் முஹம்மது சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவருக்கு தொலைபேசி மூலம் முறையிட்டார். முறைப்படி அவர் முறைப்பாடு செய்யவில்லை- என்றாலும் விஷயம் பொரளை பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டது.

பொலீஸார் விசாரணை நடத்திப் பார்த்தபோது, ஹனிபா முஹம்மது ஞாயிற்றுக்கிழமை இரவை நண்பர் ஒருவரின் வீட்டில் கழித்து மறுநாள் வீடு திரும்பினார் என்று தெரியவந்தது.

பம்பலப்பிட்டி, ஹைய்க் வீதியில் உள்ள ஹனிபா முஹம்மதுவின் வீட்டில் வைத்து அவரது வாக்கு மூலத்தை பொரளை பொலீஸார் பதிவு செய்தனர்.

நண்பரின் வீட்டில் டெலிவிஷன் பார்த்துக்கொண்டிருந்தபோது நித்திரையாகி விட்டார் என்றும்— நன்றாகப் பிந்திவிட்டதால் நண்பரின் வீட்டிலேயே அன்றிரவு தங்கிவிட்டு வீடு திரும்பினார் என்றும் ஹனிபா முஹம்மது தனது வாக்குமூலத்தில் தெரிவித்தாராம். (இ-எ)

## இலங்கைத் தமிழர் பிரச்சினை:

# காங்கிரஸின் தவறான கொள்கைக்கு பெரும் விலை கொடுக்கப்பட்டது!

## ஜனதாதள் தீர்மானம் கூறுகிறது

புதுடில்லி, செப். 20

இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக இந்திரா காங்கிரஸ் அரசு கடைப்பிடித்த தவறான கொள்கைகளுக்கு பெரும் துயரமளிக்கும் கடுமையான விலை கொடுக்கப்பட்டு விட்டது.

ஜனதாதள் கட்சியின் செயற்குழு நிறைவேற்றிய தீர்மானம் ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுபான்மையினரான இலங்கைத் தமிழரின் நலன் காக்கப்படுவது இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளின் நலன்களுக்கு முக்கியமானது என்றும் அத்தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

வெளியுறவுக் கொள்கை சம்பந்தமான தீர்மானத்தில் இந்த அம்சங்கள் சேர்க்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.


## அரசாங்க எழுதுனர் சேவை

### பயிற்சி வகுப்புகள்

ஆரம்பம்: 24 - 09 - 1991 — 2. 30 மணி

Tuesdays
Wednesdays 2. 30 — 5. 00

விண்ணப்பப் பத்திரங்களை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

[Speken English வகுப்புகளும் நடைபெறுகின்றன]

SCHOOL OF BUSINESS ADMINISTRATION

16, 3rd CROSS STREET

(O. L. R. தேவாலய மேற்குப்பக்கம்)

JAFFNA

(சி-0562)


## சாவகச்சேரி நகரசபை

# ஆதனவரி அறிவித்தல்

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் உள்ள ஆதனங்களுக்குரிய 1991 ஆம் ஆண்டு 3 ஆம் கந்தாயத்திற்கான ஆதன வரியை 30-9-91 ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு முன் எதுவித தண்டமுமின்றி செலுத்திக் கொள்ளலாமெனவும், 4 ஆம் கந்தாயத்திற்குரிய வரியை 5% வரிக்கழிவுடன் செலுத்தலாமெனவும் இத்தால் அறியத்தருகின்றேன்.

குறிப்பிட்ட திகதிக்குப் பின் வரியைச் செலுத்துவோர் அதற்கான தண்டத்தோடு செலுத்தவேண்டி வரும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி.
18-9-91

த. நவரத்தினராசா
செயலாளர்
நகரசபை, சாவகச்சேரி.

[C/0569]

# புலிகளுடன் சேர்ந்து.....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிதி சம்பந்தமான சட்ட மூலம் ஒன்றில் அரசாங்கம் தோல்வியடைந்தால் பிரதமரும் அவரது அமைச்சர்களும் ராஜினாமாச் செய்யும் நிர்ப்பந்தம் ஏற்படலாம் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

நானே இன்னமும் ஜனாதிபதியாக இருப்பதால் பிரதான குழுவின் தலைவரை அழைத்து அவரைப் பிரதமராக நியமித்து, அவரை அமைச்சரவையை அமைக்கும் படி கேட்கமுடியும்.

அப்போது ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகிச் சென்ற எம்.பிக்களின் நிலை எப்படி இருக்கும்? அவர்கள் நட்டாற்றில்தான் இருக்க வேண்டும்.

இந்த சூழ்ச்சியின் மூலம் எம்.பிக்களுக்கு மாசுகற்பிக்கும் முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

அரசமைப்பில் உள்ள விதிகள் ஒரு குழு, பின் கதவால் வந்து அதிகாரத்தைக் கைப்பற்ற ஏற்படுத்தப்பட்டது அல்ல.

### ஏற்பார்களா?

எமது கட்சியில் இருந்து விலகிச்சென்ற எம்.பிக்களை எதிர்க்கட்சியினர் ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறீர்களா?

அரசமைப்பில் மாற்றம் செய்யப்படவேண்டும் என்று ஆலோசனை கூற யாரும் விரும்பினால் அவர்களுக்கு போதிய வாய்ப்பு இருந்தது. அரசில் இருந்து கொண்டே அவர்கள் அதனைச் செய்திருக்க முடியும். அரசில் இருந்தபோது அவர்கள் அது பற்றி ஒன்றுமே பேசவில்லை.

ஜனாதிபதி என்ற முறையில் என்னாலும் அரசமைப்பில் மாற்றத்தைக் கொண்டு வரமுடியாது. அதற்கு என ஒழுங்கு முறை ஒன்றுண்டு.

### ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது

அரசியல் குற்றப் பிரேரணையில் கையொப்பம் வைத்து விட்டு, பின்னர் அதனை வாபஸ் வாங்கிக் கொண்டவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது. அதற்கான தீர்மானம் ஒன்று இன்று [வெள்ளி] நடைபெறும் ஐ. தே. க செயற்குழுக் கூட்டத்தில் எடுக்கப்படவுள்ளது.

"ராவய" பத்திரிகைக்கு திருமதி சிறிமா பண்டாரநாயக்கா அறிக்கை ஒன்றை விடுத்திருக்கிறார். எனக்கு எதிரான சூழ்ச்சி மூன்று மாதங்களாக மேற்கொள்ளப்பட்டது என்று அவர் அந்த அறிக்கையில் கூறியிருக்கிறார்.

ஐ. தே. கட்சியிலிருந்து இப்போது விலகிச் சென்றவர்கள் அக்காலப்பகுதியிலேயே சுதந்திரக் கட்சியுடன் தொடர்பு கொண்டிருந்தார்கள் என்றும் அவர் சொல்கிறார்.

ஜே. வி. பியினர் பீதியை ஏற்படுத்தி வந்தனர். அத்தொல்லை இன்று நீங்கி விட்டது. வடபகுதித் தீவிரவாத நடவடிக்கைகளே இன்று எஞ்சியுள்ள ஒரு முட்டுக்கட்டையாகும்.

### சண்டை முற்றுப்பெறும்

எமது துணிச்சல்மிக்க பாதுகாப்புப் படையினர் விடுதலைப் புலிகளை ஒழித்துக் கட்டுவதில் வெற்றிகரமாகச் செயற்பட்டு வருகின்றனர். இச்சண்டையும் முற்றுப்பெறுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினையைத் தீர்க்க அரசு முயற்சி எடுத்து வந்ததை அனைவரும் அறிவர்.

கடும் போக்கான தமிழ் அமைப்புகள் வன்செயல்களை கைவிட்டுள்ளன. விடுதலைப் புலிகள் மட்டுமே வன்செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண சிலர் எதிர்ப்புத் தெரிவித்தனர். இருந்தும் நான் விடுதலைப் புலிகளுக்கு அழைப்பு விடுத்தேன்.

### விடுதலைப் புலிகள்

இந்திய அமைதிப் படையினர் நாட்டை விட்டு வெளியேறியபோது தமிழ்த் தேசிய இராணுவம் ஒன்று அமைக்கப்பட்டது என்பதை அனைவரும் அறிவர். தமிழ்த் தேசிய இராணுவம் முஸ்லிம் மக்களைத் தாக்கும் செயலில் ஈடுபட்டு வந்தது.

அப்போது அரசாங்கப்படையுடன் இணைந்து விடுதலைப் புலிகள் தமிழ்த் தேசிய இராணுவத்தைத் தாக்கினார்கள். கிழக்குப் பகுதியில் எமது மக்களைப் பாதுகாப்பதற்காகவே எமது படையினரும் விடுதலைப் புலிகளும் தமிழ்த் தேசிய இராணுவத்திற்கு எதிராகச் சண்டையிட்டார்கள்.

இதனைச் சிலர் சாட்டாக வைத்து எமது சொந்த மக்களையே கொலை செய்வதற்கு விடுதலைப் புலிகளுக்கு நான் ஆயுதம் வழங்கியதாகப் பொய்ப் பிரசாரம் செய்து வருகிறார்கள்.

இன்று புளொட், மற்றும் ஈ. பி. டி. பி. இயக்கத்தினரும் எமது படையினரோடு சேர்ந்து விடுதலைப் புலிகளுக்கு எதிராகச் சண்டையிட்டு வருகின்றனர்.

யு. என். பி, சு. க, ம. ஐ. மு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போன்ற ஜனநாயககட்சிகளுக்குக்கூட ஆயுதங்கள் வழங்கப்பட்டன. ஆனால் தற்போது 8 பேர் கொண்ட கோஷ்டியினர் நாம் விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் வழங்கினோம் என்ற பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு கையொப்பங்களைத் திரட்டி வருகிறார்கள்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக நாம் மேற்கொண்டுள்ள இராணுவ நடவடிக்கைகள், பேச்சுவார்த்தை மூலம் சமாதானத்தை நிலைநாட்டுவதற்குவிரும்பாத எந்த ஒரு பிரிவினரும் கையாளும் வன்செயல்களை அரசாங்கம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டாது என்பதை நிரூபிக்கிறது —இப்படி ஜனாதிபதி பிரேமதாசா சொன்னார். (அ-எ)

# ஜனாதிபதி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மேலும் நெருக்கடியை ஏற்படுத்தியிருக்கிறது.

புலிகளுக்கு ஆயுதம் வழங்கிய விவகாரத்தில் அதிருப்தி அடைந்த இரு துணை அமைச்சர்கள் ஏற்கனவே இராஜினாமாச் செய்து விட்டார்கள்; மேலும் சிலர் அடுத்து வரும் தினங்களில் பிரேமாவுக்கு எதிராகத் திரும்பக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது பிரேமாவுக்கு எதிரான அதிருப்தியாளர் குழுவுக்கு உற்சாகத்தை ஊட்டியிருக்கிறது.

அதிருப்தியாளர் குழுவின் கை ஓங்கும் என்பது உறுதியானால், அவர்களின் பக்கம் சாய்வதற்கு அரச தரப்பு எம். பிக்கள் போட்டி போட்டுக்கொண்டு முன்வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

அப்படி ஒரு நிலை ஏற்பட்டால்—

நாடாளுமன்றத்தில் பிரேமாவுக்கு எதிரான குற்ற விசாரணைப் பிரேரணை விவாதத்துக்கு எடுக்கப்படும் போது ஜனாதிபதி பிரேமதாஸா பெரும் அரசியல் நெருக்கடியை எதிர் நோக்க வேண்டிவரும் என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது. [உ-3]

# செட்டிகுளத்தில் தாக்குதல்

வவுனியா மாவட்டம், செட்டிகுளம் இராணுவ முகாம் காவலரண் ஒன்றில் இருந்து நேற்றுக் காலை வெளியேறிவந்த படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

காவலரணில் இருந்து சுமார் 100 மீற்றர் தூரத்தில் வைத்து நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் இரு சிப்பாய்கள் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர்; மற்றும் பலர் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

படையினரிடம் இருந்து ரி 56-1 ரக துப்பாக்கி ஒன்றும், அதற்குரிய ரவைக்கூடு ஒன்றும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் டேவிட் அல்லது செழியன் (குலரத்தினம் செல்வக்குமார்—வவுனியா) என்ற போராளி வீரமரணமடைந்தார். (ஓ-3)

# மேலும்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சிற்றா — [செல்வி சுப்பு - மன்னார்], சகாயா — [மேரி மார்க்கிரட் தங்கராசா - மன்னார்], ஐயக்குமார் — [வடிவேலு சந்திரகுமார் - வவுனியா].

செவ்வாயன்று வீரமரணம் அடைந்தவர்கள் விவரம் வருமாறு:-

ஜஸ்ரின் — [பொன்னுச்சாமி பாஸ்கரன் - காங்கேசன் துறை], சுருளி — [தெய்வேந்திரம் வசந்தராசா - கதுமலை], மகான் — [முருகேசபிள்ளை திவாகரராசா - வண்ணார்பண்ணை], அறிவழகன் — [சுப்பிரமணியம் வேலாயுதம் - கிளிநொச்சி], மில்லன் — தெட்சணாமூர்த்தி சங்கரதாஸ் - உரும்பராய்], லோகிதன் — [சின்னத்தம்பி கோகிலானந்தன் - கரவெட்டி]. [ஓ]

# மணலாறு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

புதிய போராளிகளை அப்பகுதிக்குக் கொண்டு வந்து சேர்க்கப் பயன்படுத்தும் பாதைகளைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் இராணுவம் ஈடுபட்டுள்ளது.

புலிகளின் முகாமைப் பிடிப்பது இராணுவத்தின் நோக்கமல்ல. எவ்வளவு போராளிகளைக் கொல்லமுடியுமோ அவ்வளவு போராளிகளைக் கொல்வதே இராணுவத்தின் நோக்கமாகும்—என்றார். (ஓ-எ-3)

# மரண அறிவித்தல்கள்

## ஆசீர்வாதம் வென்சஸ்லாஸ்

சுன்னாகத்தைச் சேர்ந்தவரும் உதயன் நிறுவனத்தின் முன்னாள் ஒப்புநோக்காளருமான ஆசீர்வாதம் வென்சஸ்லாஸ் காலமாகிவிட்டார். இவர் அருந்தவநாயகியின் (ஆனைப்பந்தி வைத்தியசாலை) கணவரும், ஆசீர்வாதம் ஹென்றி ஜே. பி. (முன்னாள் பட்டின சபை உறுப்பினர்) திருமதி மரியசம்பூரணம் கிறிஸ்தோப்பிள்ளை, திருமதி சிறியபுஷ்பம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி திரேசா ஹென்றி (ஆசிரியை, இணுவில் சைவ மகாஜனா மகாவித்தியாலயம்), சிறில் சுகந்திரன் (அதிபர், சென்பீற்றர்ஸ் றோ. க. பாடசாலை, நவாலி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று காலை 9 மணிக்கு புனித அந்தோனியார் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு கன்னாகம் புனித அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகிறார்கள்.

தகவல்:
ஆசீர்வாதம் ஹென்றி

சுன்னாகம்

## சந்தியாப்பிள்ளை செபஸ்ரியாம்பிள்ளை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்டவரும் திருகோணமலையை வசிப்பிடமாகக் கொண்டவருமான இளைப்பாறிய பொலிஸ் சார்ஜன்ட் சந்தியாப்பிள்ளை செபஸ்ரியாம்பிள்ளை அவர்கள் 21-08-1991 அன்று திருகோணமலையில் காலமாகி விட்டார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

60 (102) கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.
(18201)

கிலின்ரஸ் திருஞானம்
பொது, சுகாதாரப் பரிசோதகர்
புங்குடுதீவு.

## நீ. செபஸ்தியாம்பிள்ளை

சில்லாலையைச் சேர்ந்த N. செபஸ்தியாம்பிள்ளை காலமாகிவிட்டார். இவர் பேணடேற்றின் அன்புக் கணவரும், நவறாஜா (பொறியியலாளர் அவுஸ்திரேலியா), திருமதிகள் றாஜினி (கனடா), றோகினி, றஞ்சினி, சறோஜினி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், வதனி (அவுஸ்திரேலியா), லெனாட் (கனடா), காலஞ்சென்ற எட்வேட் (காங்கேசன் சீமெந்துக் கூட்டுத்தாபனம்), ராசசிங்கம், லக்ஷ்மன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஷிவந்தி, சஞ்ஜீவ், சஜீவ், றேகன், றஜீவ், ஸ்ரெவ்வி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20-9-91) பிற்பகல் 3.30 மணிக்கு சில்லாலை சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி பேணடேற் (மனைவி)

சில்லாலை மேற்கு, பண்டத்தரிப்பு. (17927)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 20 - 09 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org